# கிறிஸ்து ஏன் வந்தார்

*கிறிஸ்து அடிக்கடி எதிர்மறைகளைப் பயன்படுத்திப் போதித்தார் - அதாவது எது உண்மையல்ல என்பதைப் பற்றி விளக்கியுரைத்தல். கள்ளப் போதகங்கள் மற்றும் கருத்துக்களைப் பற்றி மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்று அவர் நம்பினார், ஏனெனில் அவைகளால் அவர்கள் குழப்பப்படுவதைத் தவிர்க்க வேண்டும். இயேசு இப்பூமிக்கு வருதல்/வந்தது பற்றிய இப்படிப்பட்ட பல விளக்கங்களை நாம் காண்கின்றோம். இந்த "எதிர்மறைகள்" அவர் ஏன் வந்தார் என்பதைப் பற்றிய சத்தியத்தைத் தெளிவு படுத்த உதவுகின்றன.*

## உலகத்தை நியாயந்தீர்ப்பதற்கல்ல ஆனால் இரட்சிக்கவே அவர் வந்தார்

யோவான் 3:17ல், "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" என்று இயேசு கூறினார். ஒரு சமயத்தில், இயேசு எருசலேமை நோக்கிப் பயணம் சென்று கொண்டிருந்ததால் அவரை ஏற்றுக் கொள்ளாத சமாரிய கிராமத்தார்மேல் வானத்திலிருந்து அக்கினியை இறங்கச் செய்ய வேண்டும் என்று யாக்கோபும், யோவானும் விரும்பினார்கள். இயேசு அவர்களைக் கடிந்து கொண்டு, "மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்" (லூக். 9:56) என்று கூறினார்.

தேவனுடைய திட்டமும் விருப்பமும் உலகத்தின் இரட்சிப்பிற்கே தவிர அதை அழிக்கிறதற்கு அல்ல. அவர் பாவியைத் தண்டிப்பதில் ஆவலுள்ளவராய் இருப்பதில்லை; அவர் "எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்றே" (2 பேது. 3:9) விரும்புகின்றார். சிலர் தேவனை மிகவும் கொடுமைக்கார அரசனாக, மனிதரைக் கவனித்துக் குற்றம் காண விரும்புகின்றவராகச் சித்தரிக்கின்றனர்; ஆனால் இது வேதவசனங்கள் முன்னிறுத்தும் சித்தரிப்பு அல்ல. தேவன் நினிவேயை அழிக்காததினால் யோனா மகிழ்ச்சியற்றுப் போனபொழுது, அவர் அப்படிப்பட்ட எண்ணப் போக்குடையவராய் இருந்ததற்காக அவரைத் தேவன் கடிந்து கொண்டார். அவர், "வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் ... இருக்கிற மகா

*நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ" (யோனா. 4:11) என்று கூறினார். மனிதன் இரட்சிக்கப்படாமலிருக்கும்போது தேவன் ஆழ்ந்த கவலையாய் இருக்கின்றார். இரட்சிப்பதுதான் அவருடைய நோக்கமாயிருக்கிறது.*

*எனவே கிறிஸ்துவின் முதலாம் வருகையானது இரட்சிப்புக்குத் தானே தவிர நியாயத்தீர்ப்புக்காக அல்ல.*

## *நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கல்ல நிறைவேற்றுகிறதற்கே அவர் வந்தார்.*

*இயேசு தம்மைப் பின்பற்றியவர்களிடம் "நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" (மத். 5:17) என்று கூறினார். அவர், "... நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது ..." (மத். 5:18) என்று அறிவித்தார். நியாயப்பிரமாணமானது அதன் ஒவ்வொரு பகுதியும் நிறைவேறுமளவும் ஒழிந்து போகக் கூடாததாய் இருந்தது.*

*பழைய ஏற்பாடானது இன்னமும் கட்டுப்படுத்துகின்றது என்று உரிமைகோருவதற்குச் சிலர் இந்த வேதவசனப்பகுதியைப் பயன்படுத்துகையில், இது அதற்கு நேர் எதிரானதையே போதிக்கின்றது. இயேசு, நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வராமல், அவைகளை நிறைவேற்றுவதற்கே வந்தார். அவர் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார், நியாயப்பிரமாணத்தில் உள்ளபடி வாழ்க்கை வாழ்ந்து அதையும் நிறைவேற்றினார். மற்ற வேதவசனப் பகுதிகளும் கூட, மோசேயின் நியாயப்பிரமாணம் நிறைவேற்றப்பட்டு விட்டதென்றும், இனியும் அவைகள் கட்டுப்படுத்துவதில்லை என்றும் திட்டவட்டமாகப் போதிக்கின்றன (எபி. 10:9, 10; கொலோ. 2:14; கலா. 3:24, 25 ஆகியவற்றை வாசிக்கவும்.)*

*மறுரூபமான நிகழ்ச்சியும் இதே சத்தியத்தைப் போதிக்கின்றது. மோசே, எலியா ஆகியோரின் முன்னிலையில் இயேசுவைப் பற்றி, "இவருக்குச் செவி கொடுங்கள்!" (மத். 17:5) என்று தேவன் கூறினார். அதிகாரமுடைமையின் குரலாக மோசே மற்றும் தீர்க்கதரிசிகளின் உரைகளைக் கேட்க வேண்டிய காலம் ஒன்று இருந்தது, ஆனால் இப்பொழுதோ, கிறிஸ்துவின் வார்த்தைகள் கேட்கப்பட்டு, தர அளவையாக உணரப்பட வேண்டும்.*

## *ஊழியம் கொள்வதற்கு அல்ல ஊழியம் செய்யவே அவர் வந்தார்*

*இயேசு, "மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல்,*

ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்'' (மத். 20:28) என்று கூறினார். அவர் விரும்பியிருந்தால் ஏராளமான ஊழியக்காரர்களை வானத்தின் ஊழியர்களையும் கூடத் தமக்குப் பணிவிடை செய்யும்படிக் கட்டளையிட்டிருக்க முடியும். பரலோகம் மற்றும் பூலோகத்தின் ஆதார மூலங்கள் முழுவதும் அவரது கட்டளையின் கீழ் இருந்தன, ஆனால் அவர் ஊழியம் கொள்வதற்காக வரவில்லை.

உண்மையான மாபெரும் தன்மை பற்றிய இயேசுவின் பாடத்தை நாம் நினைவுகூருவோம்: "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்" (மத். 23:11). இப்பாடத்தை வலியுறுத்தி உதாரணப் படுத்துவதற்காக, அவர் கீழ்மட்டப் பணியின் அடையாளமாயிருந்த ஒரு துண்டை உடலில் சுற்றிக் கொண்டு அப்போஸ்தலர்களின் பாதங்களைக் கழுவினார் (யோவா. 13:5).

தங்களுக்கு ஊழியம் செய்யப்பட வேண்டும் என்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்ட மக்களால் இவ்வுலகம் நிறைந்துள்ளதாகக் காணப்படுகின்றது. அவர்கள் எப்பொழுதுமே - தங்கள் இணையாளர்கள், அரசாங்கம், சபை மற்றும் சாத்தியமுள்ள ஒவ்வொரு மூலங்கள் ஆகியவற்றிடம் இருந்து - பெற்றுக் கொள்ளவே விரும்புகின்றனர். சபையின் உறுப்பினர்கள் கூட தங்களுக்கு ஊழியம் செய்யப்படவில்லை என்று முறுமுறுக்கின்றார்கள். நமக்கு ஊழியம் செய்யப்பட வேண்டும் என்பது வாழ்க்கையில் நமது அக்கறைக்குரிய விஷயமாய் இருக்கக் கூடாது. ஊழியம் செய்வதே நமது பணியாகும். இயேசு மறுபடியும் வந்து, துண்டொன்றைச் சுற்றிக் கொண்டு, நமது பாதங்களைக் கழுவ வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோமா? உண்மையில் பெரியவராயிருப்பது எப்படி என்பதை நம் நடுவில் ஒரு சிறுபிள்ளையை வைத்து அவர் நமக்குப் போதிக்க வேண்டியது அவசியமா? அவர் ஏற்கனவே இந்தப் பாடங்களைப் போதித்திருக்கின்றார்; அவைகளிலிருந்து நாம் கற்றுக் கொள்வோம்.

## நீதிமான்களையல்ல, பாவிகளை அழைக்கவே அவர் வந்தார்

ஒருமுறை இயேசு தமது சீஷர்களிடம் பின்வருமாறு அறைகூவல் விடுத்தார்: "பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக் கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்'' (மத். 9:13). பாவிகளுடன் அவர் உணவுண்டதற்காக அவர் விமர்சிக்கப்பட்ட பொழுது, பின்வருமாறு பதில் அளித்தார்: ''பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை'' (மத். 9:12).

மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் மீது இயேசு கவனம் செலுத்தினார். இயேசுவே உண்மையான மேசியா என்பதற்கான உறுதிப்பாட்டை யோவான் வேண்டி நின்ற பொழுது, அவரால்

*அனுப்பப்பட்டவர்களிடத்தில், "குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது" (மத். 11:5) என்று அவருக்குக் கூறும்படி அறிவுறுத்தப்பட்டது. இது இயேசுவே கிறிஸ்து என்று யோவானுக்கு உறுதிப்படுத்தும், ஏனெனில் இயேசு செய்து கொண்டிருந்த இவை யாவற்றையும் மேசியா செய்வார் என்று முன்னுரைக்கப்பட்டிருந்தது (ஏசா. 61:1). ஆம், மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டிருந்தவர்களிடத்தில் இயேசு சென்றார். இந்த உதாரணமானது மோசமான மக்களிடம் அவர்களு க்கு உதவுவதற்கேயன்றி வேறு எதற்காகவும் நாம் தோழமை கொள்வதை நியாயப்படுத்துவதில்லை.*

## *சமாதானத்தையல்ல, பட்டயத்தை அனுப்பவே அவர் வந்தார்*

*இயேசு அன்பு மற்றும் சமாதானம் ஆகியவற்றைப் பற்றிப் பேசினாலும், "பூமியின் மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன்" (மத். 10:34) என்று அறிவித்தார். மதம் என்பது வேறு எந்தப் பிணைப்பைக் காட்டிலும் மிக மேலானதாக இருக்க வேண்டும். துன்மார்க்கச் செயல்கள் பெருகும் வரையிலும் பிரிவினைகள் இருக்கத்தான் வேண்டும். கிறிஸ்தவர்கள் எந்த விலை கொடுத்தாவது - அதாவது சத்தியத்தையே விட்டுக் கொடுத்து விட்டு - சமாதானமாய் இருப்பது என்பதை விரும்புவதில்லை. விரோதத்தைக் கொண்டு வருவதாய் இருந்தாலும் நாம் சத்தியத்தையே தேர்ந்து கொள்ள வேண்டும். நாம் நமது நண்பர்களை இழக்க நேர்ந்தாலும் கூட, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதையே தேர்ந்து கொள்ள வேண்டும். இந்தக் கருத்தில்தான் அவர் பட்டயத்தைக் கொண்டு வந்தார்:*

> *எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல (மத். 10:35-37).*

*சரீரப் பிரகாரமான குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரிடையே ஒரு தெரிவை நாம் செய்தாக வேண்டிய வேளையில், நாம் கிறிஸ்துவையே தெரிவு செய்து கொள்ள வேண்டும். நாம் அவரை நேசிப்பதைக் காட்டிலும் அதிகமாக நமது தகப்பனையோ அல்லது தாயையோ, சகோதரனையோ அல்லது சகோதரியையோ அல்லது வேறு எந்த நபரையுமோ நேசித்தால் நாம் அவரது சீஷர்களாய் இருக்க முடியாது. இயேசு கிறிஸ்து முதல் இடத்தை*

*கேட்கின்றார். அவர் கர்த்தராய் இருப்பதாய் இருந்தால் அப்போது அவர் எல்லாருக்கும் கர்த்தராய் இருக்க வேண்டும்.*

## முடிவுரை

*கிறிஸ்து ஏன் வந்தார் என்பதற்கான காரணத்தை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கின்றீர்கள்? தேவன் உங்களிடத்தில் விரும்புகின்ற மாதிரி நீங்கள் வாழ்கின்றீர்களா?*